# DEPOSITION OF WITNESS

## Chapter XXIII Code of Criminal Procedure

## In the Court of Judicial Magistrate No. II, Usilampatti

## Case No. C.C - 122/2021

## Deposition of Witness for Prosecution : P.W.5

| | | | |
|---|---|---|---|
| Name | : மல்லிகா | Caste | : |
| Father/Husband Name | : பால்பாண்டி | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**(All Accused absent, Petition filed and allowed )**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 07.07.2026.**

**முதல் விசாரணை**

நான் மீனாட்சிபட்டியில் வசித்து வருகிறேன். நான் செக்காணூரனி டோல்கேட் அருகே டீக்கடை வைத்துள்ளேன். கடந்த 5 வருடங்களுக்கு முன்னர் ஒரு நாள் மாலை சுமார் 3.30 மணியளவில் நான் எனது டீக்கடையில் இருந்தபோது பக்கத்து தோட்டத்தில் சத்தம் கேட்டது, நான் சென்று பார்த்தேன். அப்போது சாட்சி பால்பாண்டி மற்றும் சிவனேசன் ஆகியோர் தலையில் அடிப்பட்டிருந்தது. அவர்களை ஆட்டோவில் ஏற்றிக்கொண்டிருந்தார்கள். நில பிரச்சினை சம்பந்தமாக தகராறு ஏற்பட்டு காயம் ஏற்பட்டது என்று கேள்விப்பட்டேன். மேற்படி நபர்களின் பக்கத்து தோட்டத்துக்காரர்களான பால்ராஜ், தினேஸ், சம்பத் ஆகியோர்கள் மேற்படி நபர்களை தாக்கியதாக சொன்னார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1. எதிரிகளுக்கும், அ.சா.1 தரப்பினருக்கும் தோட்டம் பிரச்சினை சம்மந்தமாக கடந்த 20 வருடங்களாக பிரச்சினை உள்ளது என்றால் சரிதான். போலீசார் மறுநாள் காலை 11.00 மணியளவில் எனது கடையில் வந்து விசாரித்தார்கள். யார் யாரை அடித்தார்கள், எப்படி காயம் ஏற்பட்டது என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எதிரி பால்ராஜ் என்பவருக்கு காயம் ஏற்பட்டு அவரும் ஆட்டோவில்

சிகிச்சைக்காக சென்றார் என்றால் அதை நான் பார்க்கவில்லை. நான் சென்று பார்த்தபோது எதிரி தரப்பினர் அங்கு இல்லையென்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னது போன்று தான் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். அ.சா.4 மாயாண்டி எனது மச்சான் என்றால் சரிதான். நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும், சம்பவத்தை பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றாலும், மேற்படி எனது மச்சான் அ.சா.4 மாயாண்டி என்பவரின் உரிமையியல் வழக்கில் அ.சா.1 தரப்பினர் ஆதரவாக சாட்சியம் அளித்ததால் அ.சா.4 எனது மச்சான் கேட்டுக்கொண்டதற்கிணங்க இவ்வழக்கில் அ.சா.1 தரப்பினருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.